**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 558/2004**

Deposition of P.**W.-2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 29.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிவேலு | Father's Name | : குட்டியண்ணன் |
| Village | : வடசென்னிம | Taluk | : தலைவாசல் |
| Calling | : செயல்அலுவலர், வடசென்னிமலை | Age | : |

துவக்க நேரம் : 03.02P.M

**<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>**:

1. நான் தற்பொழுது தலைவாசல் வட்டம், வடசென்னிமலை பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நாவக்குறிச்சி கிராமத்தில் உள்ள எத்தனை கோவில்கள் எனது கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் அருள்மிகு விநாயகர் திருக்கோவில், அருள்மிகு நயினபூர்வ பெருமாள் திருக்கோவில், அருள்மிகு கம்பபெருமாள் திருக்கோவில், அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோவில், அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோவில் ஆகிய 5 திருக்கோவில்கள் எனது கட்டுப்பாட்டில் உள்ளன.

2. மேற்படி 5 கோவில்களுக்கும் சொந்தமாக மானிய நிலங்கள் உள்ளன. மேற்படி சொத்துக்கள் யார் நிர்வாகத்தில் உள்ளது என்றால் தக்கார் நிர்வாகத்தில் உள்ளது. மேற்படி 5 கோவில்களுக்கும் நான்தான் தக்காராக செயல்பட்டு வருகிறேன். மேற்படி கோவில்களின் நிர்வாகமும், பூஜையும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது.

3. மேற்படி கோவில்கள் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதா என்றால் இல்லை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கட்டுப்பாட்டில்தான் உள்ளது. மேற்படி

கோவில்களுக்கு பரம்பரை தர்மகர்த்தா என்று யாரும் உள்ளனரா என்றால் இல்லை.

ஆவணங்களை முறைப்படி தாக்கல் செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்க வேண்டுகோள் வைக்கப்பட்டது, வேண்டுகோள் ஏற்கப்பட்டு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 03.09 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D. Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.558/2004, Dt.29.04.2025.